அ.வ.எண். 142/2022

நாள் – 31.01.2025.

வாதி – முருகன்– த/பெ முத்துசாமி

**கட்டளை 10ன் கீழ் பதிவு செய்யும் பிரதிவாதியின் விசாரணை வாக்குமூலம்**

1. நானும், பிரதிவாதியும் உடன் பிறந்த சகோதரர்கள்.

2. சொத்து ஆதியில் என் தகப்பனார் முத்துசாமிக்கு பாத்தியப்பட்டது

3. நான் கிரையம் பெறும்போது, என் வீட்டிற்கும், வாதி வீட்டிற்கும் இடையே ஒரு சுவர் இருந்தது.

4. நானும் பிரதிவாதியும் எழுத்து மூலம் பாகம் பிரித்து பதிவு செய்து கொண்டோம்.

5. பாக அட்டவணையில் வழி நடைபாதை காண்பிக்கவில்லை.

6. சொத்து ஆதியில் வீடும், கடையுமாக இருந்தது. 2 கடைகள் வடக்கு பார்த்தும், வீடு தெற்கு பார்த்தும் இருந்தது.

7. அந்த சொத்தை இரண்டாக பிரித்து மேல்பாதி நானும், கீழ்பாதி பிரதிவாதியும் பிரித்துக்கொண்டோம்.

8. என் தகப்பனார் முத்துசாமி சொத்தை அனுபவிக்கும் போது தற்போதும் வடக்கே திருநெல்வேலி ரோடும், தெற்கே வெங்கடாசலமிடமும், கிழக்கே நகராட்சி ரோடும், மேற்கே மாடசாமி இடமும் உள்ளது. வீட்டின் கீழ்பாதி பிரதிவாதிக்கு குமாரசாமிக்கும், மேல்பாதி எனக்கும் ஒதுக்கப்பட்டது. என் வீட்டிலிருந்து நகராட்சி ரோட்டிற்கு வரவேண்டும் என்றால் வாதி இடத்தின் வழியாகத் தான் வரவேண்டும் வேறு வழி இல்லை.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி

**அ.வ.எண். 142/2022**

**நாள் – 31.01.2025.**

**பிரதிவாதி – குமாரசாமி– த/பெ முத்துசாமி**

**கட்டளை 10ன் கீழ் பதிவு செய்யும் பிரதிவாதியின் விசாரணை வாக்குமூலம்**

1. என் தகப்பனார் முத்துசாமி சொத்தை அனுபவிக்கும் போது தற்போதும் வடக்கே திருநெல்வேலி ரோடும், தெற்கே வெங்கடாசலமிடமும், கிழக்கே நகராட்சி ரோடும், மேற்கே மாடசாமி இடமும் உள்ளது. வீட்டின் கீழ்பாதி பிரதிவாதிக்கு குமாரசாமிக்கும், மேல்பாதி எனக்கும் ஒதுக்கப்பட்டது. வாதி அவரது கடை வழியாக வீட்டை விட்டு வெளியே செல்லமுடியும். என் வீடு சிறியதாக உள்ளது அங்கு வாதி செல்வதற்கு பாகம் தரும் அளவிற்கு இடம் இல்லை.என் வீடும் வாதியின் வீடும் சரிசமமாக பிரிக்கப்பட்டது அளவுகள் இருவருக்கும் சமபங்காக உள்ளது.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி